மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 06

ந.க.எண். 2818/ஈ1/2021 நாள். 29.03.2022

பொருள் : மேல்நிலைக்கல்வி – மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சரின் அறிவிப்பு எண்.06 – பள்ளிகளில் உயர் கல்வி, தொழில் மற்றும் வேலைவாய்ப்பிற்கு வழிகாட்டுதல் – ஆணை வெளியிடப்பட்டது – பயிற்சி கட்டகங்கள் உருவாக்கப்பட்டமை – மதுரை பில்லர் ஹாலில் 31.03.2022 மற்றும் 01.04.2022 ஆகிய இரண்டு நாட்கள் முதன்மை கருத்தாளர்களுக்கு பயிற்சி வழங்கப்படுதல் – இதனைத் தொடர்ந்து 04.04.2022 முதல் 09.04.2022 முடிய உயர்கல்வி வழிகாட்டி பயிற்சியினை அனைத்து மாவட்டத்திலுள்ள முதுகலை ஆசிரியர்களுக்கு வழங்குதல் – சார்பு.

பார்வை :
1. அரசாணை நிலை எண். 5, பள்ளிக்கல்வி (பக5(1))த் துறை நாள். 21.01.2022.
2. சென்னை–06, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநிலத் திட்ட இயக்குநரின் ந.க.எண்.473/C1/CG/ SS /2021 நாள். 28.02.2022.
3. இந்நிறுவன இயக்குநரது செயல்முறைகள் ந.க.எண்.2818/ஈ1/2021 நாள். 28.01.2022 மற்றும் 18.03.2022
4. பள்ளிக்கல்வி ஆணையர் அவர்களது அறிவுரை நாள்.02.03.2022.

------

பார்வை 1–ல் காண் அரசாணையில், பள்ளிக்கல்வித் துறை மானியக் கோரிக்கை, அறிவிப்பு எண்.6 ல் " தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு, உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள் குறித்த ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் அளிப்பதற்கு ஏதுவாக ஒவ்வொரு பள்ளியிலும் ஆலோசனை மையம் உருவாக்கப்படும். இதற்கென தனியே கலைத்திட்டம், பாடத்திட்டம் உருவாக்கப்பட்டு, 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை

பயிலும் மாணவர்களுக்கு முறையாக கொண்டு சேர்ப்பதற்கு ஏதுவாக தொடர்வகுப்புகள் நடத்தப்படும்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 9 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு சார்ந்து பள்ளி ஒன்றுக்கு ஒரு ஆசிரியர் வீதம் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டு, அதன் முதற்கட்டமாக, முதன்மைக் கருத்தாளர்களுக்கான பயிற்சி 31.03.2022 மற்றும் 01.04.2022 ஆகிய இரு நாட்களில் மதுரையில் வழங்கப்பட்டுவருகிறது. மேற்படி, முதன்மைக் கருத்தாளர்களுக்கான பயிற்சியில் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன விரிவுரையாளர் / முதுநிலை விரிவுரையாளர் மற்றும் ஒரு முதுகலையாசிரியர் ஆகியோர் பயிற்சி பெறுகின்றனர். இப்பயிற்றுநர்களைக் கொண்டு ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலுள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளியில் பணிபுரியும் ஒரு முதுகலையாசிரியரை தெரிவு செய்து பயிற்சியில் பங்கேற்கச் செய்தல் வேண்டும். இப்பயிற்சியினை 04.04.2022 முதல் 09.04.2022 வரையிலான காலகட்டத்தில் நடத்தி முடிக்கப்படவேண்டும். கல்வி மாவட்டத்தில் உள்ள தலைமை இடங்களிலேயே அல்லது ஆசிரியர்கள் எளிதாக வந்து செல்லக்கூடிய வகையில் போக்குவரத்து பயிற்சி மையங்களை தெரிவு செய்தல் வேண்டும். இப்பயிற்சிக்கான மையங்கள் காற்றோட்டமான அறைகள் மற்றும் போதுமான கழிப்பிட வசதியுடன் அமைந்திருத்தல் வேண்டும். மேலும், பயிற்சி அறையில் தேவையான LCD projector, Mic உள்ளிட்ட பொருள்கள் இருக்க வேண்டும். இப்பணிகளை மேற்கொள்ள மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

பயிற்சியில் பங்கேற்கும் பங்கேற்பாளர்கள் ஆர்வமுள்ள வேலைவாய்ப்பு பயிற்சியினை பெற்ற மற்றும் அனுபவமிக்க ஆசிரியர்களை பயிற்றுநர்களாக

தெரிவு செய்து பயிற்சியில் பங்கேற்க செய்திட உரிய தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். பயிற்சி நடைபெறும் நாட்களில் காலை / மாலை சிற்றுண்டி மற்றும் மதிய உணவு அளித்திட ஏற்பாடுகளை செய்திட மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், இப்பயிற்சிக்கான செலவினத் தொகையினை தங்களது திட்டம் மற்றும் செயல்பாடுகள் செலவினத் தலைப்பின் கீழ் மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். பயிற்சியில் பங்கேற்கும் ஆர்வமுள்ள, அனுபவமிக்க ஆசிரியர்களை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரிடமிருந்து பெற்று 01.04.2022 அன்று பிற்பகல் 02.00 மணிக்குள் tnscertjd3@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

இயக்குநர்

பெறுநர்

1. முதல்வர், அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்.
2. அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல்

பள்ளிக் கல்வி ஆணையர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பலாகிறது.